**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 276** **நாள் : 17.09.2025**

**தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளினை முன்னிட்டு, மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சமூக நீதி நாள் உறுதிமொழியினை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.**

தந்தை பெரியார் அவர்களின் 147ஆவது பிறந்த நாளினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் ஆணையாளர் திரு ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மலர்த்தூவி மரியாதை செலுத்தினார். இதனைத் தொடர்ந்து, ஆணையாளர் அவர்கள் தலைமையில் சமூக நீதி நாள் உறுதிமொழியினை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

**சமூக நீதி நாள் உறுதிமொழி**

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு நெறியையும்,

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பு நெறியையும்

எனது வாழ்வியல் வழிமுறைகளாகக் கடைப்பிடிப்பேன்!

சுயமரியாதை ஆளுமைத் திறனும் – பகுத்தறிவுப்

பார்வையும் கொண்டவையாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்!

சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய

கொள்கைகளுக்காக என்னை ஒப்படைத்துக் கொள்வேன்!

மானுடத்தின் மீது பற்றையும் மனிதாபிமானத்தையும் என்றும் போற்றுவேன்

சமூக நீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைத்திட இந்த நாளில் உறுதியேற்கிறேன்!

இந்நிகழ்வில் துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி. சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (பொது) திருமதி எஸ்.ராஜேஸ்வரி, உதவி ஆணையாளர் (பொது நிர்வாகம்) செல்வி உமா மகேஸ்வரி, விழிப்பு அலுவலர் திரு.ஜெகதீஸ்வரன் உள்ளிட்ட அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**